**பத்தாம் வகுப்பு – தமிழ்**
**முதல் இடைப்பருவ ஆயத்தத் தேர்வு 2013**
**புறவய வினாக்கள்**
**பயிற்சி ஏடு**

## செய்யுட் பகுதி

..........

நாள் தேர்வாளர் பெயர் வகுப்பும் பிரிவும் மொத்த மதிப்பெண் 60

**இயல் - 1**

**வாழ்த்து**

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. மாணிக்கவாகசகர் பிறந்த ஊர்..........................
2. மாணிக்க வாசகர் பாடல்கள்.................திருமுறையில் இடம்பெற்றுள்ளன.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோவில்.................................உள்ளது.
4. மாணிக்கவாசகர்.......................மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்.
5. ஜி.யு.போப் திருவாசகத்தை................மொழியில் மொழிபெயர்த்தார்.
6. திருவாசகத்திற்கு உருகார்.........................உருகார்.

உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7. மெய்தான்.........(அரும்பி / அறும்பி) விதிர்விதிர்த்துன்
   ...................................(விரையார் / விறையார்) கழற்கு.
8. கைதான் நெகிழவிடேன். இதில் நெகிழ என்பது........................(தலர /தளர) என்னும் பொருளில் வந்துள்ளது.

பொருத்துக.

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| 9. | விரை | - | உடல் |
| 10. | கழல் | - | பெருகி |
| 11. | ததும்பி | - | மணம் |
| 12. | மெய் | - | அணிகலன் |

**திருக்குறள்**

கோடிட்ட இடங்களை நிரப்புக

13. திருக்குறளில்..............அதிகாரங்களும்...........குறட்பாக்களும் உள்ளன.
14. திருக்குறள்.........................முதலான உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
15. ஒழுக்கத்தின் எய்துவர்..............இழுக்கத்தின்
    எய்துவர் .................பழி.

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

16. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல்
    1. நால்வர் நான்மணிமாலை 2. திருவள்ளுவமாலை 3. இரட்டைமணிமாலை
17. திருக்குறள் ................வெண்பாக்களால் ஆன நூலாகும்.
    1. சிந்தியல் 2. குறள் 3. நேரிசை
18. இணையில்லை முப்பாக்கு இந்நிலத்தே – எனப் பாடியவர்
    1. பாரதியார் 2. சுரதா 3. பாரதிதாசன்

உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

19. இறுவரை காணின் ............................(கிழக்காம் / கிளக்காம்) தலை.
20. மனவலிமையுடையோா் என்னும் பொருள் தரும் சொல்......................(உரவோர் / உறவோர்)

அடி எதுகையை தேர்ந்தெடுத்து எழுதுக.

21. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
    என்றும் இடும்பை தரும்

சீர் மோனையை அடிக்கோடிடுக.

22. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

விடுபட்ட சீர்களை எழுதுக.

23. பரிந்தோம்பிக் ............................ஒழுக்கம்.........................
தேரினும்.........................துணை

24. ஊக்கம் உடையான்...........................பொருதகர்
தாக்கற்குப்....................தகைத்து.

உவமையைப் பொருளொடு பொருத்தி எழுதுக.

25. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று

26. கொக்கொக்க கூம்பும் பருவத்து

சீர் பிரித்து எழுதுக.

27. ஒழுக்கமுடைமைகுடிமைஇழுக்கம்இழிந்தபிறப்பாய்விடும்.

28. காலங்கருதியிருப்பர்கலங்காதுஞாலங்கருதுபவர்.

## ஏலாதி

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

29. ஏலாதி ..................................நூல்கள் ஒன்று.
1. பதினெண்மேற்கணக்கு 2. பதினெண்கீழ்க்கணக்கு 3. காப்பியம்

30. கணிமேதாவியாரின் காலம்.........................
1. கி.பி.மூன்றாம் நூற்றாண்டு 2. கி.பி. நான்காம் நூற்றாண்டு 3. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு

31. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள்...................., .........................
1. திருக்குறள், நன்னூல் 2. திரிகடுகம், ஏலாதி 3. நற்றிணை, அகநானூறு

உரிய எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

32. நூ.........(ல் ள்) நோக்கி வா..............(ழ் ள்) வான் நு..................த்து (னி / ணி)

## இயல் 2

## சிலப்பதிகாரம்

கோடிட்ட இடங்களை நிரப்புக

33. இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும்........................ஆகும்.

34. சிலப்பதிகாரம். மணிமேகலை,................வளையாபதி.......................என்பன ஐம்பெருங்காப்பியங்கள்.

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

35. இளங்கோவடிகள்.....................நாட்டைச் சேர்ந்தவர்.
1.சோழ 2. சேர 3. பாண்டிய.

36. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர்..........................
1. கவிமணி 2. பாரதிதாசன் 3. பாரதியார்

உரிய எழுத்தைத் தேர்ந்தெடுத்தெழுக.

37. வா........தல் (ல் ழ்) வே.........டி (ண் ன்) ஊழ்வினை து..........ப்ப (ற / ர)

38. தா...ந்த (ள் ழ்) குடையன் தளர்..த (ன் ந்) செங்கோ...........ன் (ள / ல)

39. திருவாசகத்திற்கு உருகார்.........................உருகார்.

சீர் எதுகையை அடிக்கோடிடுக.

40. வருக மற்றவள் தருக ஈங்கென.

41. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே.

சீர் மோனையை அடிக்கோடிடுக.

42. கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று.

43. யானோ அரசன் யானோ கள்வன்.

பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 44. | புகார்க் காண்டம் | – | 13 காதைகள் |
| 45. | மதுரைக் காண்டம் | – | 7 காதைகள் |
| 46. | வஞ்சிக் காண்டம் | – | 10 காதைகள் |
| | | - | 15 காதைகள் |

## தமிழ் வளர்ச்சி

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

47. குடும்ப விளக்கு..................படைப்புகளுள் ஒன்று.
    1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. சுரதா
48. பாரதிதாசனார்......................... என அழைக்கப் படுகிறார்.
    1. புரட்சிக் கவிஞர் 2. தேசியக் கவிஞர் 3. உவமைக் கவிஞர்

## இயல் 3

## கம்பராமாயணம்

உரிய எழுத்தைத் தேர்ந்தெடுத்தெழுக.

49. இரு........த (ன்/ ந்) வ....ளலைக் (ல் / ள்) கா...வந் (ன/ ண) தெய்தினா........(ன் / ண்).
50. இடரு...(ர/ ற) ம...யோரும் (றை / ரை) எ....யுறு (ரி/ றி) மெ.....கானார். (ழு / ளு).

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

51. கம்ப ராமாயணம்.................காண்டங்களைக் கொண்ட நூல்.
    1. ஐந்து 2. ஆறு 3. மூன்று
52. சரசுவதி அந்தாதி ...................................இயற்றிய நூல்கள் ஒன்று.
    1. கம்பர் 2. ஒட்டக்கூத்தர் 3. புகழேந்தி
53. கம்பரைப் புரந்தவர்..........................
    1. ஔவையார் 2. புகழேந்தி 3. சடையப்ப வள்ளல்.

உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.

54. மட அன்னக் கதியது செல

சீர் மோனையை எடுத்துதெழுதுக.

55. இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா

அகரமுதலி பார்த்துப் பொருள் எழுதுக.

56. இறை, நாவாய்

பொருத்துக

57. இடர் - நிலவு
58. நாவாய் - துன்பம்
59. இறை - படகு
60. இந்து - தலைவன்

**ஆசிரியருக்கு வேண்டுகோள்**

1. தங்களுக்குக் கிடைக்கும் இரண்டு பாடவேளைகளில் அல்லது மாலைநேர சிறப்பு வகுப்பில், இப் பயிற்சி ஏட்டைத் தேர்வாக வைக்கலாம்.
2. கற்றல் குறைபாடுள்ள மாணவர்களை, இப்பயிற்சி ஏட்டில் மீண்டும் மீண்டும் எழுத வையுங்கள்.
3. இவ்வினாத்தாளைக் கற்றல் குறைபாடுடைய மாணவர்களிடம் கொடுத்து, அவர்களாகவே விடையைக் கண்டுபிடித்து எழுத வழிவகை செய்யுங்கள். (இதன் வழியாக அம்மாணவர் வாசிக்க இயலும்.)
4. மீண்டும் மீண்டும் விடைகளை எழுதச் செய்யுங்கள்.
5. மாணவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுங்கள்.

**வாழ்த்துகளுடன்**

ரா. தாமோதரன், தமிழாசிரியர், அ.மே.நி. பள்ளி, மெலட்டூர் 614 301, தஞ்சை மாவட்டம்
(தொடர்புக்கு 9965851345)

பத்தாம் வகுப்பு – தமிழ்
முதல் இடைப்பருவ ஆயத்தத் தேர்வு 2013
புறவய வினாக்கள்
பயிற்சி ஏடு

## உரைநடைப் பகுதி

..............
மொத்த மதிப்பெண் 23

நாள் தேர்வாளர் பெயர் வகுப்பும் பிரிவும்

### இயல் - 1
### உயர்தனிச் செம்மொழி

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழர் மனித வாழ்வை ................, ................ எனப் பிரித்தனர்.
2. குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசியமொழி........................
3. 2004 ஆம் ஆண்டு..................திங்கள் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
4. தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர்.....................ஆவார்..

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

5. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர்...................
   1. திரு.வி.க 2. உ.வே.சா 3. பாவாணர்
6. இன்றைய மதுரையில்.................................தமிழ்ச்சங்கம் இருந்தது.
7. 1. மூன்றாம் 2. இரண்டாம் 3. முதலாம்

### இயல் - 2
### பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள்

கோடிட்ட இடங்களை நிரப்புக

8. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள.. ................ஒன்று உண்டு.
9. பெரியார் சமூக ................எதிர்த்தவர். மூடக்கருத்துகளை.........................

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

10 அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர்
   1. திரு.வி.க 2. பெரியார் 3. பாரதிதாசன்
11. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று................இல்லை.
   1. வாக்குரிமை 2. பேச்சுரிமை 3. சொத்துரிமை

விடைகளுக்கு ஏற்ற வினா எழுதுக.

12. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
13. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.

சந்திப்பிழை நீக்கி எழுதுக.

14. அனைத்து துறைகளிலும் ஆண்களைபோலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்கவேண்டும்.
15. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.

ஒருமை, பன்மை பிழை நீக்குக.

16. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்.
17. பெண்கள் பெறவேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

### இயல் – 3
### அண்ணல் அம்பேத்கர்

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

18. மும்பையில் அம்பேத்கர் சிறிதுகாலம்............................பேராசிரியராகப் பணியாற்றினார்.
    1. வாணிகவியல் 2. அறிவியல் 3. பொருளியல்
19. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது.......................
    1. பத்மஸ்ரீ 2. பாரத ரத்னா 3. பத்ம விபூஷன்

ஒருமை, பன்மை பிழை நீக்குக.

20. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது..
21. வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்படவேண்டுமென அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.

சந்திப்பிழை நீக்கி எழுதுக.

22. ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமராவ் அம்பேத்கராக மாறினார்.
23. ஏழைகளுக்கு பொருள்பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.

பத்தாம் வகுப்பு – தமிழ்
முதல் இடைப்பருவ ஆயத்தத் தேர்வு 2013
புறவய வினாக்கள்
பயிற்சி ஏடு

## இலக்கணப் பகுதி

..............

மொத்த மதிப்பெண் 62

நாள் தேர்வாளர் பெயர் வகுப்பும் பிரிவும்

### இயல் - 1

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, பொம்மை......................செய்யப்............. என வரும்.
2. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் ......................... தொடர் ஆகும்.
3. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளை............................என வரும்.

தொடரை மாற்றி அமைக்க

4. திருக்குறளை அனைவரும் அறிவர் - வினாத்தொடாக மாற்றுக.
5. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
6. கிளி கல்லால் அடிபட்டது – உணர்ச்சித் தொடராக மாற்றுக.
7. வாரியார், “குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்'' என்றார் – அயற்கூற்றாக்குக.
8. நேற்று புயல் வீசியது. மரங்கள் சாய்ந்தன – கலவைத்தொடராக மாற்றுக.

சந்திப்பிழையற்ற தொடராக மாற்றுக.

9. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

ஒருமை பன்மை பிழை நீக்குக.

10. அவன் கவிஞன் அல்ல.

பிறமொழி சொல்லற்ற தொடராக்குக.

11. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.

வழூஉச் சொல்லற்ற தொடர் ஆக்குக.

12. வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.

### இயல் - 2

கோடிட்ட இடங்களை நிரப்புக

13. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது..................................
14. தொழிலைக் குறிக்கும் சொல்................................
15. வினைமுற்று ..........................., ............................. என இருவகைப்படும்.
16. ஓர் எச்ச வினை ...............கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.

தொகைச் சொற்களை விரித்தெழுதுக.

17. இருவினை
18. முத்தமிழ்
19. மூவேந்தர்
20. நானிலம்
21. ஐந்திணை

### இயல் - 3

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

22. இளவழகன் வந்தான். இது ........................தொடர்.
    1. குறிப்பு 2. வெளிப்படை 3. எதுவுமில்லை.
23. மாடு என்னும் சொல் ....................... ஆகும்.

1. உயர்திணைப்பொதுப்பெயர் 2. அஃறிணைப் பொதுப்பெயர் 3. விரவுப்பெயர்

24. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது................குறிக்கும்
    1. பசு 2. காளை 3. கன்று

<u>பொருத்துக</u>

| | | |
|---|---|---|
| 25. வெளிப்படைச் சொற்கள் | - | சோறு உண்டான் |
| 26. குறிப்புச் சொல் | - | கல், மண் |
| 27. இனங்குறித்தல் | - | மாடு பால் கறந்தது. |

<u>உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.</u>

28. நான் (கு) மழையில் நனைவது பிடிக்கும்.
29. அண்ணன், தம்பி வீடு (கு) சென்றார்
30. மாணவர்கள் (ஐ) வட்டமாக உட்சாரச் செய்க.
31. நான் (கு) திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
32. வேல்விழி திருக்குறள் (ஐ) படித்தாள்.

<u>இளமைப் பெயர்களைப் பொருத்துக</u>

| | | |
|---|---|---|
| 33. ஆடு | - | கன்று |
| 34. மான் | - | பிள்ளை |
| 35. கீரி | - | குட்டி |
| 36. சிங்கம் | - | குஞ்சு |
| 37. கோழி | - | குருளை |

நிறுத்தற்குறி இடுக.

38. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மை காக்கும்

<u>பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக</u>.

39. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.ஷ
40. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
41. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
42. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
43. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.

<u>அரபு எண்களைத் தமிழ் எண்களை மாற்றுக.</u>

44. 45
45. 79
46. 150
47. 250

<u>இணையான தமிழ்ப்பழமொழிகளை எழுதுக.</u>

48. Health is wealth
49. Too much of anything is good for nothing.
50. No pain no gain.
51. Haste makes waste
52. Knowledge is power
53. Charity begins at home.
54. Covert all lose all.
55. Diamonds cut diamonds.
56. East or west, home is the best.
57. Empty vessels make the greatest sound.
58. money makes many things.
59. Eagles don’t catch flies.
60. Old is gold
61. Prevention is better than cure.
62. Slow and steady wins the race.